(திரு. ஆர். சௌந்திரராஜன்)

நீரைக் கொண்டு குடிநீர் பற்றாக் குறையை நீக்க தண்ணீர் வழங்குவது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் எங்களுக்கு இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே அந்தத் தகவல் எதுவுமில்லை. இருந்தாலும், கீழ்பவானி அணையிலே ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி ஆண்டுதோறும் தண்ணீர் திறந்துவிடப்படும். கடந்த ஆண்டு தண்ணீர் திறந்து விடப்படக்கூடிய தேதியிலே அணையிலே போதுமான தண்ணீர் இருந்தும்கூட, ஏன் திறந்துவிடப்படவில்லை? அணையிலே இருக்கிற தண்ணீரை தஞ்சாவூருக்கு திறந்து விட்டு விட்டு, பெரியார் மாவட்டத்தை வறண்ட பாலைவனமாக்கிய அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா ? இந்த ஆண்டாவது ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி அன்று தஞ்சாவூருக்கு தண்ணீர் விடாமல் பெரியார் மாவட்டத்திலே பாசனம் பெறுகின்ற கீழ் பவானி அணையின் மூலம் பாசனம் பெறுகின்ற பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கீழ்பவானி அணைத் தண்ணீரை பெரியார் மாவட்டத்திற்கு விடுவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது அவருக்கு அனுப்பி வைக்கப்படும். ஏற்கனவே அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே தண்ணீர் வராது, எனவே, எள் போன்ற பயிர்களைப் பயிரிட வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம். வேறு பயிர்களைப் பயிரிட வேண்டாம் என்று அரசு அறிவித்திருக்கிறது.

(41) உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் பாசனப் பகுதிக்கு முறைப்படி தண்ணீர் வழங்குவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் பாசனப் பகுதியில் 60,000 ஏக்கர் நிலத்தில் நெல், கடலை, சோளப்பயிர் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளதற்கு

கவன ஈர்ப்புகள்

(திரு. கு. ரமணி)

முறைப்படி வழங்க வேண்டிய தண்ணீரை வறட்சியின் காரணமாக குளம், குட்டைகளுக்கு திறந்துவிட்டுள்ளபடியால், அப் பகுதி விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்காமல் விளைச்சல் பெருமளவு பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் கோவை மாவட்டத்திலுள்ள, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பல்லடம் வட்டங்களுக்கும், மற்றும் பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரம், காங்கேயம் வட்டங்களுக்கும் பாசன வசதியளிக்க மேற்கொள்ளப்பட்டது. நடப்பு ஆண்டில் ஜனவரி மாதத்தில் பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட நீர்த் தேக்கங்களிலுள்ள நீரின் அளவைக் கொண்டு 3½ மாதங்களுக்கு (105 நாட்களுக்கு) மட்டுமே போதுமானதாக பரம்பிக்குளம் பிரதானக் கால்வாயில் முதல் மண்டலம், மற்றும் உடுமலைப்பேட்டை கால்வாய் ஆகியவற்றின் கீழ் உள்ள பழைய ஆயக்கட்டு நிலங்களாகிய சுமார் 66,103 ஏக்கருக்கு பாசன நீர் அளிக்க அரசு ஆணை வழங்கப்பட்டது. 1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 10ஆம் நாள் மற்றும் 1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23ஆம் நாள் ஆகிய நாட்களில் நடந்த பாசன கூட்டத்தில் மேற்கண்ட ஆயக்கட்டுதாரர்கள் 4½ மாதங்களுக்கு நீர் வழங்க வேண்டுமென்று கோரினர். மேலும் வறட்சி நிலை காரணமாக இவ்வாண்டில் பாசனம் பெறாத பரம்பிக்குளம் பிரதான கால்வாய் இரண்டாவது மண்டலத்திலுள்ள பூலாங்கிணர், மற்றும் குடிமங்கலம் கிராமப் பகுதியிலுள்ள குளம், குட்டைகளுக்கு தண்ணீர் நிரப்பக் கோரினர். விரிவாக்கத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்களும் பாசன நீர் வழங்க கோரினர். இக் கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு, ஏப்ரல், மே, ஜூன் திங்களில் மழையையும் எதிர்பார்த்து, பாசனத்திற்காக பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட பிரதானக் கால்வாய் மற்றும் உடுமலை கால்வாய்களில் 1986ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15ஆம் நாள் முதல் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. ஆயக்கட்டுதாரர்கள் கோரியவாறு இதே தருணத்தில் மேற்குறிப்பிட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட பூலாங்கிணர் மற்றும் குடிமங்கலம் கிராமத்திலுள்ள குளம் குட்டைகளுக்கும் நீர் வழங்க அரசு ஆணை வழங்கியது. அதன் அடிப்படையில் பூலாங்கிணர் கிராமத்தில் உள்ள குளம் குட்டைகளுக்கு ஒரு தரம் முழுமையாக தண்ணீர் விடப்பட்டுள்ளது. மேலும் பாப்பன்குளத்தைச்சேர்ந்த 1,514 ஏக்கர் நிலங்களில் பாசனத்திற்காக கிளவங்காடு கிளை வாய்க்காலுக்கும், தண்ணீர் விடுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த விவசாயிகளைப் பொறுத்த வரையில் அறுபதாயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்டு பாசன தண்ணீர் அளிக்க ஆணை வழங்கப்பட்டது என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், கோவை மாவட்டத்தில் வறட்சி நிலை மிகவும் அதிகமாக இருக்கிறது என்று தெரிந்துதான் பாசன ஏரியா விவசாயிகளினுடைய கூட்டம் ஜனவரி மாதம் 10ஆம் தேதியும், 23ஆம் தேதியும் கூட்டப்பட்டு 4½ மாதங்களுக்கு அவர்களுக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் இந்த வருஷம் முறைப்படி தண்ணீர் கொடுக்க தகுதி இல்லாத பகுதிகளுக்கு, குளம், குட்டைகளுக்குத் தண்ணீர் விடுகிறோம் என்ற பெயரால் அங்குள்ள அதிகாரிகளாகத் தண்ணீர் விட்டதன் பலனாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் நியாயமாகக் கிடைக்கவில்லை. அவர்கள் பெரிய நஷ்டத்திற்கு ஆளாகி உள்ளார்கள். ஆகவே, இவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதற்கு வேண்டிய நஷ்டயீட்டைக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புவதோடு, அவர்களுக்கு இப்பொழுது தண்ணீர் முறையாக விளைச்சலுக்குக் கொடுக்கப் பட்டுள்ளதா என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின்படி முறையாகத் தண்ணீர் விட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் அரசு ஆணை வழங்கி, இருக்கின்ற அளவுக்குத் தண்ணீரை வழங்கியிருக்கிறது. குளம், குட்டைகளுக்கும் தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. ஏதாவது உறுப்பினர் கூறுவது போன்று தவறு எங்கேயாவது நடந்திருக்கிறது என்று தெரிய வந்தால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

(42) கோவை மாவட்டத்தில் கூட்டுறவுக் கடனை ஒத்திவைத்தல் குறித்து

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' கோவை மாவட்டத்தில் தற்சமயம் கடும் வறட்சி நிலையுள்ளதால் கூட்டுறவுக் கடன் வசூலில் மேற்கொள்ளப்படும் கடுமையான நடவடிக்கையின் காரணமாக அம்மாவட்ட விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்து '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.